# ALABAMA TAMIL SANGAM ( ATS )

# பர்மிங்காம் பக்கங்கள்

**APRIL 14TH , 2024**



**Q1 2024 NEWSLETTER**

## ATS PRESIDENT ADDRESS



**CHARLES RAJ DANIEL**

அலபாமா அன்பு தமிழ் நெஞ்சங்களுக்கு இனிய தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

அலபாமா தமிழ்ச் சங்க (ATS) காலாண்டு செய்திமடலின் இந்த தொடக்கப் பதிப்பிற்கு உங்களை வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். நாம் இன்று துவங்க இருக்கும் இந்த புதிய பயணம், நம் தமிழ்ச் சமூகத்தின் மக்கள் தொடர்பு, ஒத்துழைப்பு, திறமை பகிர்வு மற்றும் சமூக ஈடுபாட்டை மேலும் செழிப்புற செய்யும் என நம்புகிறேன். இந்தச் செய்திமடல் நம் சாதனைகளைக் கொண்டாடுவதற்கும் மதிப்புமிக்க நுண்ணறிவுகளைப் பகிர்ந்து கொள்வதற்கும் நம்மை இணைப்பதற்கும் ஒரு சிறந்த தளமாகச் செயல்படும்.

இந்த காலாண்டு செய்திமடலை வெளியிடும் இத்தருணத்தில், நீங்கள் ஒவ்வொருவரும் ATS க்கு வழங்கும் அபாரமான அர்ப்பணிப்பையும், அயலாத ஆர்வத்தையும் நான் நினைவுகூற கடமைப்பட்டுள்ளேன். உங்களின் அசைக்க முடியாத ஆதரவும் அர்ப்பணிப்பும்தான் எங்களை முன்னோக்கிச் செல்ல உந்துகிறது, மேலும் இந்த செய்திமடல் நம் பிணைப்புகளை வலுப்படுத்தி நம் ஒற்றுமை குரலை பெருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயம் இல்லை.

இந்த செய்திமடலின் பக்கங்களில் நீங்கள், கதைகள், கவிதைகள், கடந்தகால நிகழ்ச்சிகள், எதிர்கால நிகழ்ச்சிகள், அறிவிப்புகள் மற்றும் விளம்பரதார வாய்ப்புகள் ஆகியவற்றைக் காணலாம்.
இந்த செய்திமடலை உருவாக்க பங்களித்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். எழுத்தாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் முதல் வடிவமைப்பாளர்கள் மற்றும் பங்களிப்பாளர்கள் வரை, உங்கள் அர்ப்பணிப்பும், படைப்பாற்றுலுமே இந்த சிந்தனையை உயிர்ப்பித்துள்ளது, மேலும் நாம் ஒன்றாகச் சாதித்ததில் நான் மிகவும் பெருமைப்படுகிறேன்.

உங்கள் அனைவரையும் படிக்கவும், உங்கள் குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளவும் நாங்கள் ஊக்குவிக்கிறோம். இது எங்களின் கன்னி முயற்சியாக இருப்பதால், ஒவ்வொரு காலாண்டிலும் இந்த செய்திமடலை மேலும் பொலிவேற்றுவதற்கான எந்தவொரு ஆக்கபூர்வமான கருத்தையும் நாங்கள் வரவேற்கின்றோம். **atsexecutive@alabamatamilsangam.org** இல் நீங்கள் உங்கள் கருத்துக்களை தெரிவிக்கலாம்.

மீண்டும் ஒரு முறை என் நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன், மேலும் இந்த செய்திமடலின் மூலம் நீங்கள் உருவாக்க இருக்கும் மகத்தான படைப்புகளையும் நெஞ்சில் நீங்கா பதியப்போகும் நினைவுகளையும் எதிர்பார்த்து உங்களுடன் சேர்ந்து காத்திருக்கிறேன்.

ஒவ்வொரு பதிப்பையும் நமது அலபாமா தமிழ்ச் சங்க குடும்பத்தின் வலிமை, உறுதி, மற்றும் ஒற்றுமைக்கு சான்றாக மாற்றுவோம்.

# ATS PRESIDENT ADDRESS CONTINUED

## ATS UPCOMING KEY PROGRAMS AND POSSIBLE TIMELINES

- **Q1 Executive and Board members Update - April 17th 2024 - Hybrid event**
- **Q2 Executive and Board members meetup - July 2024**
- **ATS Cricket Fest 2024 - Aug 2024**
- **ATA School Annual day Celebration's - Aug 2024**
- **ATS Family Camping Weekend - Sep 2024**
- **Q2 Executive and Board members Update - Oct 2024**
- **Annual Cultural Event 2024 - Nov 2024**
- **Health & Wellness Workshop - TBD**
- **ATS Fund Raiser - TBD**
- **ATS Youth workshop - TBD**
- **ATS Serve day - Community Outreach - TBD**

Dear ATS family,

Wishing all of you a Prosperous and Blessed Tamil New Year.

I am thrilled to welcome you to this inaugural edition of our Alabama Tamil Sangam (ATS) Quarterly newsletter. Today marks an exciting milestone as we embark on a journey to foster better communication, collaboration, shared talents and engagement within our community.
This newsletter serves as a platform to celebrate our achievements, share valuable insights, and connect with each other.

As we launch this Quarterly newsletter, I am reminded of the incredible dedication and passion that each of you bring to ATS. It is your unwavering support and commitment that drives us forward, and I am confident that this newsletter will further strengthen our bonds and amplify our collective voice.
In the pages of this newsletter, you will find original stories, poems, past programs, upcoming future programs, announcements, and sponsorship opportunities.



I want to extend my heartfelt gratitude to all those who have contributed to making this newsletter a reality. From the writers and editors to the designers and contributors, your dedication and creativity have brought this vision to life, and I am immensely proud of what we have accomplished together.


We encourage all of you to read, share with your family and friends. As this is our first initiative, we appreciate any constructive feedback to further advance this newsletter every quarter.

You can write to us at atsexecutive@alabamatamilsangam.org

Thank you for being part of this journey, and I look forward to the incredible stories and memories that we will create together through this newsletter.
Let's make every edition a testament to the strength, resilience, and unity of our ATS Family.


Charles Raj Daniel

# ALABAMA TAMIL ACADEMY ARTICLES




**Art by: Pooja Ravi**

**Art by: Sharon Baskar Raj**



MEMBER ARTICLE

**அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு.**

# அன்பு



**Kavitha Karthikeyan**

அன்புத்தோழமைகளே,

நம் வாழ்வில் பல தருணங்கள், பல நிகழ்வுகளை நாம் கடந்து வந்திருப்போம் அது போல் நான் கண்ட ஒரு நிகழ்வை ஒரு நகலாக இங்கே பகிர்கிறேன். நம் வாழ்க்கைக்கு அன்பு என்பது மிகவும் முக்கியம். ஆனால் இந்த அன்பானது எத்தனை பரிமாணங்கள் எடுக்கின்றன என்று தெரியுமா? இங்கே பார்க்கலாம் வாருங்கள்!. நாம் வாழும் இந்த அவசரமான உலகில் பல நேரம் பலவற்றை கவனிக்க மறந்து விடுகிறோம். ஒரு நாள் நான் கண்ட காட்சி, என் மனதில் ஆழமாக பதிந்த அந்த காட்சி. ஒரு பள்ளிச்சிறுவன் பள்ளியில் இருந்து வீட்டிற்கு தன் நண்பர்களோடு ஆரவாரத்தோடு வந்துகொண்டு இருந்தான், அப்போது ஒரு நாய்க்குட்டியை பார்க்கிறான் அந்த நாய்க்குட்டியின் கால் ஒரு பள்ளத்தில் மாட்டிக்கொண்டது. அப்போது அவன் மிகவும் வேகமாகச்சென்று அந்த நாய்க்குட்டியின் காலை எடுத்து காப்பாற்றுகிறான்.
அங்கே அவன்காட்டியது “மனிதாபிமானம்.” அந்த நாய்க்குட்டி அச்சிறுவனை தன் கால்களால் தடவிக்கொடுத்தது. அந்த தழுவலின் பெயர் “நன்றி”. அச்சிறுவன் அந்த இடத்தில் இருந்து சிறிது தூரம் சென்றவுடன் அங்கே ஒரு ஐஸ் வண்டியை பார்க்கிறான், பார்த்தவுடன் “ஐஸ் தாத்தா இன்னிக்கி என்ன புதுசா கொண்டு வந்துருக்கீங்க என்று கேட்டான்” கேட்டவுடன் அந்த வயதானவர் “இந்தா உனக்கு இன்னைக்கி இரண்டு ஐஸ்” என்று கொடுத்தார். அதற்கு அச்சிறுவன் “ஏன் எனக்கு இன்னைக்கி ரெண்டு ஐஸ்? என் கிட்ட ஒரு ஐஸ்க்கு தான் காசு இருக்கு”
என்று கூறினான். “இல்லை தம்பி அந்த நாய்க்குட்டி ரொம்ப நேரமா கத்திட்டு இருந்துது நான் போகலாம்னு நெனச்சேன் அதுக்குள்ள நீ வந்து காப்பாத்திட்டே” அச்சிறுவனுக்கு அங்கே கிடைத்த அந்த இரண்டாவது ஐஸின் பெயர் “பரிசு.” மிகவும் சந்தோஷமாக வீட்டிற்கு ஓடிச்சென்று அச்சிறுவன் தன் அம்மாவிடம் நடந்ததை கூறினான், மிகவும் சந்தோஷம் அடைந்த அச்சிறுவனின்தாய் “எப்பவும் எல்லார்கிட்டயும் அன்போடு இருக்கனும் அன்பு” என்று கூறினாள்.

அன்பு என்று பெயர் வைத்ததாலோ அச்சிறுவன் அன்பாக இருக்கிறானோ என்னவோ. இந்த அன்பை பார்த்தீர்களா இதற்கு பெயர் தான் என்ன? எத்தனை பெயர்கள் இருக்கின்றன. பல பேர் அந்த வழியில் சென்றாலும் யாரும் அந்த நாய்க்குட்டியை கவனிக்கவில்லை. இது போல் நாமும் பல தருணங்களை கவனிக்காமல் விட்டுருக்கலாம். ஏன் நமக்கு கிடைத்த அன்பை கூட உணராமல் இருந்திருக்கலாம். ஏன் நம் அன்பை பல பேர் எதிர்பார்க்கலாம் அதை கூட நாம் பகிர மறந்திருக்கலாம். எனவே நாமும் அனைவரிடத்தில் அன்போடும் கனிவோடும் இருப்போம். இது போல பல தருணங்கள் உங்கள் வாழ்வில் நடந்திருந்தால் பகிருங்கள்.

அன்பை வளர்ப்போம்! அன்போடு வளருவோம்!

இப்படிக்கு
கவிதா கார்த்திகேயன்

MEMBER ARTICLE

## நம் ஆத்திசூடி (நகர வருக்கம்)



Vikash Achutaramaiah Ryali

நம்பிக்கையுடன் வாழ்க்கையை நடத்துவோம்
நாவையும் மனதையும் அடக்குவோம்
நிம்மதியாய் வாழ ஆவன செய்வோம்
நீதிநெறியுடன் உண்மையாய் உழைப்போம்
நுட்பமாய் ஒவ்வொன்றையும் கற்போம்
நூலகமாய் மனையை உருமாற்றுவோம்
நெஞ்சத்தின் அழுக்குகளை நீக்குவோம்
நேசமுடன் எல்லோருடன் இணங்குவோம்
நைந்து நைந்து இறைவனைத் துதிப்போம்
நொடிப் பொழுதும் வீணாக்காமலிருப்போம்
நோயின்றி உடல்நலனைப் பாதுகாப்போம்
நௌவிபோல் துள்ளிக் குதித்துக் களிப்போம்
எந்நாளையும் நன்னாளாக்கிக் கொண்டாடிடுவோம்

LET'S LIVE OUR LIVES WITH FAITH
LET'S CONTROL OUR TONGUE (FOOD) AND THE MIND (THOUGHTS)
LET'S DO EVERYTHING POSSIBLE TO LIVE IN PEACE
LET'S WORK FAITHFULLY WITH JUSTICE
LET'S LEARN EACH THING WITH ATTENTION TO DETAILS
LET'S TRANSFORM OUR HOME INTO A LIBRARY
LET'S REMOVE THE IMPURITIES OF THE HEART
LET'S GET ALONG WITH EVERYONE WITH LOVE
LET'S PRAY TO GOD MELTING OUR SOUL
LET'S NOT WASTE A MOMENT
LET'S PROTECT OUR HEALTH WITHOUT DISEASE
LET'S JUMP AND HAVE FUN LIKE DEER
LET'S MAKE EVERY DAY GOOD AND CELEBRATE IT

விகாஷ் அச்சுதராமையா

**MEMBER ARTICLE**

# எம் தமிழே

\




**Madhavi Ravi**

உயிர் நாவில் உருவான எம் தமிழே!
அன்னையாய் இருந்து அரவணைத்து
அரசாங்கம் செய்தவளே!
கன்னியாய் இருந்து காதல் ரசம்
சொட்ட தேனாய் இனித்தவளே!
இயல், இசை, நாடகமாய் ஆடி
எங்கள் நாடி நரம்பெல்லாம் சிலிர்க்க வைத்தவளே!
இரண்டடியில் வாழ்க்கையின்
தத்துவம் உணர்த்தும் திருக்குறளானவளே!
அகநானூறும், புறநானூறுமாய்
ஆனந்தம் கொடுத்தவளே!
பதினெண்கீழ், மேற் கணக்கும்,
எட்டுத்தொகை, பத்துப்பாட்டுமாய்
மதிமகிழ படைத்தவளே!
சிலப்பதிகாரமாய் சிந்தைநிறைந்தவளே!!
லகரம், ழகரம், ளகரங்களை
ஆபரணங்களாய் சூடிக்கொண்டவளே!
இலக்கண செம்மையால்
வரம்பே இல்லா வாய்மொழி ஆனவளே!
எந்த மொழியை கற்ற போதும்
உயிர் மூச்சில் உறைந்த
எந்தாய் தமிழே உன்னை
எந்நாளும் நான் மறவேன்!

இப்படிக்கு,
மாதவி ரவி

MEMBER ARTICLE

# சரியா? தவறா?



**Srinivasan Hariharan**

அலுவலகத்திற்கு அவசரமாககிளம்பிக்கொண்டிருந்தேன். கைப்பேசியில் அழைப்புவந்தது. அட்மின் கிளர்க் சாமிநாதன் பேசினார்.

"சார், டிக்கெட் ரெடி, நாளைக்கு சேரன்ல தத்கால் பண்ணியாச்சு" என்றார். திடீரென்று திருப்பூரில் ஒரு க்ளையன்ட் மீட்டிங் ஏற்பாடு ஆகியிருந்தது. ஒரு வளரும்சாப்ட்வேர் கம்பெனியில் சேல்ஸ் மேனேஜர் ஆக இருந்தேன். புது கம்பெனி, ஆகையால் மீட்டிங்கிடைப்பதே குதிரைக் கொம்பாக இருந்தது. அதனால் எப்படியாவது பயணித்துவிட தயாராக இருந்தேன். "குட் சாமி, டிக்கெட்டை ஆபீஸ்ல வாங்கிக்கறேன்"

"இல்ல சார், நான் ஆபீஸ்வரல, நீங்க போய் வாங்கிக்கோங்க சார்" என்றார்.
"எங்க போய் வாங்கிக்கணும்?" வால்டக்ஸ் ரோடு அருகில்ஒரு முகவரி கொடுத்தார். அலுவலகம் போகும் முன்னே டிக்கட் வாங்கி விடலாமென்று கிளம்பினேன். காரில் சென்றால் சென்ட்ரல் நெரிசலில் சிக்கி விடுவோமென்று என் மகளின் ஆக்டிவா எடுத்துக்கொண்டு போனேன்.

திருவல்லிகேணியிலிருந்து மாங்குமாங்கென்று படபடக்கும் வெய்யிலில் மகளின் ஹெல்மெட்டை மாட்டிக்கொண்டு வால்டக்ஸ் ரோட்டை அடைந்து டிக்கட்டை வாங்கிக்கொண்டு கிளம்பும் போது சற்றே வேகமாக செல்லலாம் என்று ஒரு சந்துக்குள் நுழைந்தேன். இருபுறமும் ஏதேதோ ஹார்ட்வர் கடைகளாக இருந்தன. லாவகமாக நுழைந்து குறுக்கு வழி பிடிக்க இங்கும்அங்குமாக போய்க்கொண்டிருந்தேன். திடீரென்று எங்கிருந்தோ ஒரு போலீஸ்காரர் ஜரூராக கை காட்டி என்னை நிறுத்தினார். ஒன்றும் புரியாமல் சடக்கென்று பிரேக் போட்டு வண்டியை நிறுத்தினேன்.

“சார், என்ன சார், ஒன் வேல வரீங்க?" “ஓ' சாரி சார், நான் பார்க்கல. இந்த ரூட்ல இதுக்குமுன்னாடி வந்ததில்லை சார். நான் திரும்பி போய்டறேன் ' என்றேன்,
"அது சரி சார், வந்தது தப்பு தானே" "கரெக்ட் சார், தப்பு தான், தெரிஞ்சு தப்பு பண்ணல சார் " என்றேன் சற்றே அசடு வழிந்த படியே. " இருநூறு ருபாய் குடுத்துட்டு போங்க"
" ஜாஸ்தி சார், நூறு ருபாய் தரேன்" என்று வாலேட்டை திறக்க ஆரம்பித்தேன்,

" நீங்க ஒண்ணு பண்ணுங்க, இன்னும் ரெண்டு மணிநேரத்துல சார்ஜன்ட் வந்துருவார், நீங்க அவர்கிட்ட ஆயிரம் ருபாய் பைன் கட்டிட்டு போங்க" என்று நக்கலாக சொல்லிவிட்டு வண்டி சாவியை புடுங்கிக் கொண்டார்.

MEMBER ARTICLE

# சரியா? தவறா?

என்னடா வம்பா போச்சே என்று சற்றே நிதானித்துக்கொண்டு, "என்ன சார், கோச்சுண்டீங்க போலிருக்கே, இந்தாங்க" என்ற படி வாலேட்டை திறந்தால், நாலு விசிட்டிங் கார்டு, சில ரசீது தவிர சுத்தமாக இருந்தது. ஐயோ, நேற்றே ATM போய் இருக்கணும்.. நொந்த படியே, வண்டியை நிறுத்திவிட்டு போலீஸ் மாமாவிடம் போனேன். தலையைசொரிந்த படியே,

சார், ATM போக மறந்துட்டேன், சுத்தமா கேஷ் இல்ல, நீங்க வேணும்னா பாருங்க" என்று வாலேட்டை காண்பித்தேன். கடுப்புடன் என்னைப் பார்த்து, "பார்த்தாபெரிய ஆபிசர் மாதிரி இருக்கீங்க, வெளிய வரும்போது இப்படியா வருவீங்க?", கேவலமாக கேட்டார். இது உனக்கு தேவையா என்று வடிவேலு கேட்பது போலதோன்றியது, சுதாரித்துக்கொண்டு,
" நான் வேணா பக்கத்துல ATMல போய் பணம் எடுத்துட்டுவரேன் சார், என்னை நம்புங்க" என்றேன் என் பின்னாலே இன்னொரு சாண்ட்ரோ கார் ராங் சைடில் வரவே,
"சரி, உங்கள பார்த்தா ஏமாத்தறவர் மாதிரி தெரியலை, போங்க.. நான் இங்க தான் இருப்பேன், எடுத்துட்டுவாங்க" என வண்டிச்சாவியை எடுத்துக் கொடுத்தார்.

டக்கென்று கிளம்பி மவுண்ட் ரோட்டுக்குள் நுழைந்தேன். அதுவரை ஒரு ATMமும் தென்படவில்லை. நான் போகும்சைடில் ஒரு ATMமும் கிடைக்காமல் ஸ்பென்சர் பிளாசா எதிரில் இருந்த ஒன்றின் வாசலில் நிறுத்தி பணம் எடுத்துக்கொண்டேன். நேரே ஆபீஸ் போகமனம் சொன்னாலும், அந்த போலீஸ் காரரிடம் கொடுத்த வாக்கையும் மறக்க முடியவில்லை. என்ன செய்யலாம் என்று யோசித்தேன்.
“கொடுப்பதே லஞ்சம், இதில் என்ன பெரிய வாக்கு வேண்டிக்கிடக்கு?” என்று என் மனைவி லட்சுமி கேட்பதுபோல் தோன்றியது. சரி தான்.. இருந்தாலும், நாம் செய்ததும் தவறு தானே? ஒரு வேளை, அந்த போலீஸ் சார்ஜன்ட் வரும் வரை இங்கேயே இருங்கள் என்று கண்டிஷன் போட்டிருந்தால், நம்மால் என்ன செய்திருக்கமுடியும்? நாம் சொன்னதை நம்பித்தானே அந்த போலீஸ் என்னை விட்டார், அப்படி இருக்க அதை எப்படி நான் புறக்கணிப்பது? சரி, பைத்தியக்காரத்தனமாக இருந்தாலும் பரவாயில்லை, போய் கொடுத்து விடலாம் என்று முடிவு செய்து, உடனே மீண்டும் வால்டக்ஸ் ரோட்டுக்கு புறப்பட்டேன்.

மீண்டும், முன் போலவே ராங் சைடுலேயே (!) போய் அந்த போலீஸ் காரரிடம் நின்றேன். ஹெல்மெட்டுக்குள் இருந்த என்னை அடையாளம் காணாமல் நிறுத்தும்படி சைகை செய்தார். இதுவரை என்றுமே இல்லாத தைரியத்துடன், கம்பீரமாக இறங்கி நடந்து அவரிடம் சென்று ஹெல்மெட்டை கழட்டினேன். நான் யார் என்பது நினைவுக்கு வந்தவுடன், அதிர்ச்சியுடனும், ஆச்சரியத்துடனும் என்னை பார்த்தார்.
" என்ன சார், நிஜமாகவே பணம் எடுத்துட்டு வந்துட்டீங்களா?" என்றார்.
"ஆமாம் சார், இந்தாங்க.." கன்னத்தை சிறிதாக சொறிந்துக்கொண்டு,

" டீ சாப்பிடலாம் வாங்க" என்று, என் பதிலை எதிர்பார்க்காமல் நடந்து எதிரில் இருந்த டீக்கடைக்குள் சென்று உட்கார்ந்தார். இதை எதிர்பார்க்காதநான், வாலேட்டை உள்ளே வைத்துக்கொண்டு, அவர் எதிரே சென்று அமர்ந்தேன்.

MEMBER ARTICLE

# சரியா? தவறா?

"தம்பி, சாருக்கும் ஒரு டீ கொண்டு வா" இரண்டு கண்ணாடி கோப்பைகள் வந்தன. \ எடுத்துக்குங்க சார்" என்றார்.

என்னடா இது, நமக்கு தீடீரென்று இவ்வளவு மரியாதைஎன திகைப்புடன் கோப்பையை கையில் எடுத்தேன். மெதுவாக மீசையை நெருடியபப்படியே, " நீங்க ரொம்ப நல்லவரா இருக்கீங்களே சார்?", வினவினார். "இதுல என்ன சார் இருக்கு, நீங்க என்னை நம்பி விட்டீங்க, உங்க நம்பிக்கையை காப்பாத்தனும் இல்லையா?"

" அது சரி சார், ஒரு நாளைக்கு நான் ஆயிரம் பேர பாக்கறேன், எப்படிடா போலீஸ் கண்ணுல மண்ண தூவிட்டு போகலாம்னு தான் பாக்கறாங்க, உங்கள மாதிரி இதுவரைக்கும் யாரும் வரல சார்" என்றார், டீயை உறிஞ்சியபடியே.

" இல்ல சார், இப்ப நான் பாட்டுக்கும் அப்படியே போய் இருந்தேன்னா, அடுத்த வாட்டி, என்ன மாதிரி ஒருத்தர் காசில்லாம வந்தா உங்களுக்கு அவரை வுஉடனும்னு தோணுமா சொல்லுங்க?"

" அது கரெக்ட் தான் சார், மக்களுக்கு போலீஸ் மேல நம்பிக்கை இல்லாத மாதிரி எங்களுக்கும் மக்களை பொதுவா நம்ப முடியறதில்லை சார்" என்று கோப்பையை வைத்து விட்டு எழுந்தார். நானும் அவருடன் எழுந்தேன்.

"ஓகே சார், நீங்க கிளம்புங்க, இனிமே ரோடு சைனைபார்த்து ஓட்டுங்க" என கிளம்பினார்.

"சார், பணம் வாங்கிக்குங்க" என தொடங்கு முன், வேண்டாம் என கை சைகை காண்பித்து தன் இடத்திற்குபோய் நின்று கொண்டார். டீ பையனிடம், காசு கொடுத்து நான் வண்டியிடம் செல்லும் போது, ஒரு யமஹா வண்டிக்காரர் உரக்க கெஞ்சிக்கொண்டிருந்தார்,
"சார், என்கிட்டே இப்போ பணம் இல்லை, நான் பக்கத்து ATMல போய் எடுத்துட்டு வரேன் சார், ப்ளீஸ்" அவரைஅனுப்பிவிட்டு, நான் இருக்கும் திசை நோக்கி ஒரு புன்னகை செய்துவிட்டு போனார் நம்ம போலீஸ்கார்.

லஞ்சம் கொடுத்தது தவறா? இல்லை, கொடுத்த வாக்கை நிறைவேற்ற நினைத்தது சரியா? என்ற கேள்விக்கு விடையை யோசித்துக்கொண்டே ஆபீசுக்கு கிளம்பினேன். ஒன்று மட்டும் கண்டிப்பாக புரிந்தது, வாழ்க்கை ஒவ்வொரு நாளும் வெவ்வேறு அனுபவங்களையும் மனிதர்களையும் நமக்கு அளிக்கிறது, அதிலிருந்து எதை கற்றுக்கொள்வது என்பது நம்மை பொறுத்தது.

சீனிவாசன் ஹரிஹரன்

**Q1 HIGHLIGHTS**
**JAN 20TH 2024**

# பொங்கல் திருவிழா



**Anitha Gopinath**

நமது தமிழர்களின் பாரம்பரியமான திருவிழாக்களில் ஒன்று தான் "பொங்கல் திருவிழா". இது தமிழர்களுக்கே உரித்தான மிகப்பெரிய விழாக்களில் ஒன்று. இதில் நாம் சூரியனுக்கும், விவசாயிகளுக்கும் நன்றி செலுத்தும் வகையில் இந்த திருவிழாவை நாம் கொண்டாடுகிறோம். இந்த திருவிழாவை தமிழ்நாட்டில் கொண்டாடுவதை நாம் பார்த்திருக்கிறோம். இங்கு வெளிநாட்டு வாழ் தமிழர்களாகிய நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து நமது எதிர்கால சந்ததியினருக்கு எடுத்துரைக்கும் விதமாக நமது "ATS" குழு இதை அழகாக அனைவருக்கும் புரியும் விதமாக சித்திரங்களாலும், கிராமப்புற நடைமுறைகளின் மாதிரி வடிவங்களாலும் நமக்கு அழகாக எடுத்துரைத்தார்கள். இம்மாதிரி நாம் விழாக்களை முன் மாதிரியாக நிகழ்த்துவதால் நமது வருங்கால இளைய தலைமுறைகளுக்கும் நமது பாரம்பரியத்தையும், கலாச்சாரத்தையும் அறிய ஒரு சந்தர்ப்பமாக அமைகிறது. இதைப்போல், நமது கலாச்சாரத்தையும், பாரம்பரியத்தையும் வெளிப்படுத்த நிறைய நிகழ்ச்சிகளை நடத்துமாறு நமது "அலபாமா தமிழ்ச் சங்க" குழுவை உற்சாகப் படுத்துவோம்.

Pongal is one of the traditional festivals for the Tamil people. During this festival, we give thanks to the sun and the farmers. This festival is celebrated throughout Tamil Nadu. As Tamil-speaking people living aboard, we are here to share this with our future generations and to showcase our culture and heritage. Our "ATS Cultural Team" illustrated this for everyone to understand and modeled rural practices beautifully for us. It is an opportunity for our future generations to learn about our heritage and culture as we model these kinds of festivals. We encourage our ATS Community to look for more events like this to showcase our culture and heritage.

Thanks
Anitha Gopinath
ATS Cultural Team







**Q1 HIGHLIGHTS**
**MAR 9 & 10TH 2024**

# SPIKES AND NETS SPORTS TOURNAMENT



**Vaidya Nathan & Archana Vaidya**

ATS organized Spikes and Nets Tournament March 9 & 10 2024

As a larger health initiative launched by ATS to prioritize, educate, and promote wellness, we hosted indoor sporting events including Badminton, Throwball, and Volleyball tournaments to encourage popular Asian sports in the diverse greater Birmingham community. These include individuals of all ages and genders, with an intentional focus on encouraging children, women, and men's participation. In line with International Women's Day, we organized teams of women competing in Throwball - a common sport in Asia.
The event was graced by Hoover city councilmen Mr. Steve McClinton and Dr. Swatika Butey, a professional International Badminton player and Research Fellow at UAB.

The sports event was held at the Spain Park High School Gym. We had a record participants in many of the sports and categories. It was an opportunity for ATS to engage as a community outreach event. We would like to extend sincere thanks to all the Chief guests, sponsors, participants, volunteers, and spectators who attended this event making it a great success!
We appreciate WBRC for taking time on a Sunday morning to come over to cover the Alabama Tamil Sangam (ATS) Nets and Spikes sports event.

Thanks
Vaidya Nathan
ATS Sports Academy Team











**Q1 HIGHLIGHTS**
**MARCH 17TH 2024**

# ATS WOMEN'S DAY



**Vedha Krishnamoorthy & Joyce Solomon**

Celebrating Success: ATS Women's Day Recap: March 17th 2024
The ATS Women's Day event held on March 17th was an incredible success, bringing together nearly 35 inspiring women for a day of empowerment, connection, and growth. From networking sessions to insightful discussions, the event was a testament to the strength and resilience of women in our community.
The day began with warm welcomes from the ATS executive committee members Charles, Sarah, and Vinod, setting the tone for a day filled with camaraderie and support. Attendees had the opportunity to mingle and connect during networking sessions, enjoying light snacks, and fostering new connections.

An engaging icebreaker led by Mubeena Abdullah kicked off the agenda. Each of the ladies introduced themselves with a trait of a superwoman that was remarkable! All participants bonded over a trust game, breaking down barriers and fostering a sense of unity. The atmosphere was electric as women from diverse backgrounds came together to share their stories and experiences.
One of the highlights of the event was the life journey session, where four remarkable women shared their personal stories of resilience, passion, and motherhood. From pursuing their dreams to navigating career breaks for motherhood, their stories served as inspiration for all in attendance. Kudos to Vijayalakhmi Parella, Shanthi Ravikumar, Sugantha Krishnan and Vaishnavi Reddy.

We were honored to have Vinitha Ganesan Phd, health coach, as our esteemed chief guest. Vinitha gracefully accepted our invite to join our event and speak about health and wellness. She enlightened us with invaluable insights into holistic wellbeing, empowering us to prioritize self-care and mindfulness in our daily lives. We practiced meditation, that helped us learn to relax, be more focused and realize the potential within us. She also discussed about how healing is something that comes from within whether it is spiritual, mental or physical. Her speech made us realize that though there are others to hold our hands, at the end of the day, everything is with us and within us, that made us all feel so empowered!

The event also featured four engaging round table discussions, each focused on a key aspect of personal and professional development: work-life balance, pursuing passions, self-care, and time management. These discussions served as invaluable platforms for women to engage in deep, meaningful conversations, fostering a supportive environment where they could freely share their experiences, challenges, and strategies for success. In the work-life balance discussion led by Deepa Suresh, participants explored the delicate balance between professional responsibilities and personal priorities. From juggling career aspirations with family commitments to finding time for self-care amidst a busy schedule, women shared their diverse perspectives and practical tips for achieving harmony in both spheres of life.

**Q1 HIGHLIGHTS**
**MARCH 17TH 2024**

# ATS WOMEN'S DAY CONTINUED

The pursuing passions table led by Subha Prahad provided a space for women to delve into their interests, dreams, and aspirations beyond the confines of their professional roles. Attendees discussed the importance of pursuing hobbies and passions that bring joy and fulfillment, inspiring each other to carve out time for self-expression and personal growth amidst their busy lives. In the self-care discussion led by Vinitha Ganesan, participants delved into the crucial topic of prioritizing their physical, mental, and emotional well-being. From mindfulness practices to setting boundaries and practicing self-compassion, women exchanged invaluable insights and actionable strategies for nurturing themselves amidst the demands of everyday life.

Lastly, the time management round table led by Vino Sivam offered practical guidance on optimizing productivity and efficiency in both personal and professional realms. Participants shared their favorite time management techniques, such as prioritization, delegation, and effective goal setting, empowering each other to make the most of their time and energy. The ladies even discussed the art of saying “No” when appropriate.

Overall, these round table discussions provided a rich tapestry of experiences, perspectives, and advice, empowering women to navigate their personal and professional journeys with confidence and resilience. By coming together to share wisdom, support, and encouragement, participants left the event feeling inspired and equipped to thrive in all aspects of their lives. Embracing change was a recurring theme throughout the day, with participants reflecting on their journeys from their home countries to the United States for various reasons. These discussions fostered empathy, understanding, and solidarity among attendees, reinforcing the strength of our community.

A highlight of the event was the cake-cutting ceremony, symbolizing unity and celebration of womanhood. A small ATS giveaway was given to each participant. As we bid farewell, Joyce delivered a heartfelt closeout, encouraging attendees to continue the momentum of the day by fostering ongoing connections through initiatives like ladies' night out and women’s sports. In conclusion, the ATS Women's Day event was a resounding success, showcasing the power of women coming together to inspire, support, and uplift one another. As we reflect on the day's events, let us carry forward the spirit of camaraderie and empowerment, creating a brighter future for women everywhere.

With gratitude,
Joyce Solomon & Vedha Krishnamoorthy












## YOUTH CORNER

\

## ஒரு சொல் இரு பொருள்

வானில் பறப்பது?
படித்து வாங்குவது?

__________________.

நிலவின் மறுபெயர்?
மாதத்தை குறிப்பது?

__________________.

## கண்டுபிடி கண்டுபிடி

| | | | | |
|---|---|---|---|---|
| ஆ | ப் | மா | ன் | ல் |
| க | டு | டா | ச | லி |
| ம | ட் | ஈ | யா | பு |
| டு | ஆ | டை | னை | அ |
| உ | மா | நா | ய் | ணி |
| பூ | னை | ய | ண | ல் |

1. மாடு
2. ஆடு
3. பூனை
4. அணில்
5. நாய்
6. ஈசல்
7. மான்
8. புலி



## புதிர்

வெள்ளை ஆடை உடுத்திய மஞ்சள் மஹாராணி அவள் யார்?

__________________.

உங்களுக்கு சொந்தமானது ஒன்று ஆனால் உங்களை விட மற்றவர்களே அதிகம் உபயோகிப்பார்கள். அது என்ன?

__________________.

# TAMIL NEW YEAR THEME
# ART COMPETITION ARTICLES

\

**Art by: Anitha Gopinath**




**Art by: Rithika Harichandran**





*Congratulations for winning the prize! Thanks for your submission!*

- ATS Executive

# TAMIL NEW YEAR THEME
# ART COMPETITION ARTICLES

\

**Art by: Aadhi Mathavan**




**Art by: Shruthi Harichandran**




Congratulations for winning the prize! Thanks for your submission!

- ATS Executive

Interviewers:
Kavitha Karthikeyan
& Mubeena Abdullah

# MEMBER SPOTLIGHT

## SPOTLIGHT - VINO SIVAM



Vino Sivam & Family

**Tell us about yourself and your family.**

I am Vinodhini (known as Vino) and my husband is Sivam Ratha Krishnan. My native is Madurai, but I grew up in Chennai. My husband Sivam is originally from Singapore. We have two lovely kids, a son and a daughter. Both are studying at UAB. I completed my college education in Chennai/Dallas, TX. Currently, I am working as a strategist in Regions Bank. I am also involved in various community and volunteering services. I am a very positive and people person. I get my energy from people. Love yourself first and everything else falls into line.

**Who Is your Role Model and Why?**

என் "அப்பா" is my role model. He was an atheist and scientifically approached everything. I always admire him for how he connected with people and I too got that character from him. I would voluntarily go and talk to people to make them feel included. I am an "intentional includer," and that gives me satisfaction.

**What was your feeling when you first came to the USA? What were the struggles you faced? How did you overcome the struggles?**

At the age of 19, I got married and came to Oklahoma City. After being there for three months, I found it challenging to make new friends and this led me into a period of depression. However, with the unwavering support of my husband, Sivam, we decided to relocate to Dallas, where we were able to make many friends and connections. This experience taught me the value of resilience, adaptability, and the importance of having a support system. My first job as a contact center representative was a game-changer for me, as it allowed me to interact with individuals from different cultures. It helped me to develop my communication skills and overcome my fear of speaking with foreigners. As a soulmate, Sivam is very supportive of all my challenges. Adjusting to a new culture was not easy and I had to put in a lot of effort to overcome the differences.

## MEMBER SPOTLIGHT CONTINUED

\ **What should a woman carry with her to develop her leadership qualities?**
First, you should love and trust yourself and be confident. I do exercise regularly and take care of myself. Once you decide, "never doubt your decision," Decision பண்றதுக்கு முன்னாடி நூறு பேர் கிட்ட பேசலாம், suggestion கேக்கலாம் but once you made a decision never doubt yourself. Sometimes you need to vent out to people who are not close to you. I share and vent out to the people in the hair or nail salon. "Everyone is equal" is another piece of advice for ladies. "As soon as you look into a man's eyes, he will know you are confident and bold." Subsequently, "Always switch up roles, which aid in knowledge acquisition." You may be happy in your current role but always try to come out of your comfort zone and don't hesitate to raise your hand. Live by this quote *"Don't sit down and wait for the opportunity to come. Get up and make them"-Madam C.J Walker.*

**Share with us your community focus and interests.**
During my school days, I actively engaged in various scouts and volunteer activities, including extending support to the various communities during the monsoon season. This passion for community service has continued to grow over the years and has become an integral part of my life.

**எதுக்கு new members ATSku வரணும்னு நினைக்கிறீங்க? What is your advice for future generation in ATS?**
தமிழ் சங்கம் is apart from country it has more focus on தமிழ் and people. I encourage more people to be a part of ATS to know the values of Tamil culture. அதனால தான் நம்ப kidsku எல்லா festivals தெரியுது. Don't sit back and be like மத்தவங்க பண்ணுவாங்க நினைக்காதீங்க. You come forward and take the role then you will know நம்ப communityku என்ன பண்ணமுடியும்! நாங்க இவ்ளோ தூரம் வந்துருக்கோம்னா we participated and volunteered in the committees for communication, outdoor activities, food, and cultural. I was a secretary too. That's how you'll prosper even more. A woman I know mentioned how the committee aided her in landing her first job. Encourage everyone who wishes to join our ATS community. This community is also helping you in some way. You can enhance your profile by adding that you are volunteering for a nonprofit, which could help you get noticed in new ways. Working with a committee is not a burden if you have the time to dedicate to it. Come and showcase your talent and skills to the whole world.

# HEALTH & WELLNESS

## ஆரோக்கியத்தில் வசந்தம்: HEALTH TIPS FOR CHILDREN



**Sugantha Krishnan**

வணக்கம் Dear friends in the Tamil community. I am honored to write a little piece for the ATS Newsletter. As spring arrives, let's explore two common challenges faced by young families during this season.

### <u>ஒவ்வாமை நாசியழற்சி - Allergic rhinitis</u>

எங்கே பார்த்தாலும் அழகான பூக்கள். என்ஜாய் பண்ணலாம்னு பாத்தா 'ஆச்சு' னு தும்மல் வந்துருச்சு!

**Enter Allergy season. If your child has a persistent runny nose with sneezing for weeks, they may have seasonal allergies. Other symptoms include teary eyes, nose or ear itching, and rubbing their nose frequently. Symptoms appear when pollen levels are high. Here are some tips to manage allergies.**

1. Shower after being outdoors and change clothes to remove pollen you pick up outside
2. Keep windows shut & use AC or HEPA purifier to filter allergens
3. Check the weather to see the pollen count in your area to help you prepare.
4. Wear a mask while vacuuming. If someone has allergies, ask them to leave the room for 20 minutes after vacuuming as dust mites stay airborne.
5. To remove dust mites from your child's favorite stuffed animal, freeze it overnight and put it in the dryer the next morning.
6. Know your allergy relief options: speak with your doctor to know your medication options including over-the-counter medications and sprays

When is it not an allergy?(இது ஒவ்வாமையா அல்லது தொற்றுநோயா?) consider the possibility of infection if they are under 2 and have been around other children. Keep an eye out for other symptoms, and remember that if your child has a fever, it's likely not seasonal allergies.

# HEALTH & WELLNESS

## ஆரோக்கியத்தில் வசந்தம்: HEALTH TIPS FOR CHILDREN

\

### அதிகப்படியான காயம்- Overuse Injury

Spring sports are beginning and there is excitement in the air. Encourage your child to enjoy any physical activity that motivates them. Preventing overuse injuries caused by repetitive movements during sports activities is crucial. Here are some tips to avoid them:

1. Remember to get a sports physical before the season starts
2. Encourage kids to try different activities so they can work different muscle groups and different parts of their body
3. Know your child's training requirements as far as training times and workloads
4. Build-in breaks: Avoid training longer than 5-6 days/week. Let them have 2-3 months off from any given sport in a year
5. Aim for one team at a time
6. Learn from experience: "Playing through pain' is not safe
7. Focus on healthy sleep
8. Set a healthy example for your child - Parents, remember to take care of yourselves too!

நான் இந்த தமிழ் சமூகத்தில் ஒரு அங்கமாக இருப்பதை நினைத்து பெருமைப்படுகிறேன். இந்தியாவில் இருக்கும் வயதான நம் உறவினர்கள் மற்றும் இங்கே தனியாக குழந்தை பெற்றெடுக்கும் தாய்மார்கள் இவர்களுக்கு நாம் ஆதரவாக இருக்க வேண்டும். இந்த தமிழ் சமூகமானது நமக்கு இரண்டாம் வீடு போல் நினைத்து ஒன்று கூடி வாழ்வோம்.

**Sugantha Krishnan MD, FAAP (குழந்தை நல மருத்துவர்)**

**Active Living - To all the womens in the community, if you are interested in Throwball / Badminton / Cricket join the group practices along with other women in the community to have fun and to live a healthy and active living. Contact atsexecutive@alabamatamilsangam.org for more info.**

## WELCOME NEW FAMILIES

\






Roy Pravien & Jeyani Presita


Please introduce yourself to ATS family if you have moved recently to Alabama! Contact us @atsexecutive @alabamatamilsangam.org



Jagadish sairam & Mubeena Abdullah

# ATS COMMITTEE

## Together we can make a meaningful difference!




### Comic Corner



# Q1 - SPONSORS

SUPPORT

**Gold Sponsor** Dr. Maran & Karthika

**Silver Sponsors**

Rohini Ayurveda Wellness center
*Healing with nature*

DESI BROTHERS FARMERS MARKET

GRAND AJM BUILDERS
Tradition - Innovation - Safety

**Bronze Sponsors**

Expedia Cruises
Air, Land & Sea Vacations
Mary Ann

J&J Collections
The Essence Of Elegance

RIGEL SPICES

sachai tea co

THE BALAGEE FOUNDATION

DRYFT COFFEE

Dr. Rajashekar

**Crystal Sponsor** - Dr. Prasanna Krishnamurthy,
Amin Issa Family

HOOVER GROCERIES

Limbaugh Toyota

TOYOTA

FYZICAL®
Therapy & Balance Centers

We are humbled by your generosity.
Thank you for your unwavering support.
- ATS If you are interested in

# ANNOUNCEMENT

ATTENTION PLEASE!

## LOGO DESIGN COMPETITION

ATS Sports Academy is in the process of planning for the upcoming Cricket Tournament. We are looking for your creatively and ideas in creating a Logo that will be used throughout going forward. Winner will be acknowledged at the inauguration and will win a gift. All are welcome to participate and due by 5th May. Please send your entries to atsexecutive@alabamatamilsangam.org

## ATS WEBSITE UPGRADE

We are looking to enhance our existing website. We plan to develop a database and an app alongside, if you have the expertise and willing to support, develop and or manage please reach us at atsexecutive@alabamatamilsangam.org. All are welcome.

## ATS SPONSORS AND BUSINESS ADVERTISEMENT

We welcome sponsors both individual and Business. If you desire to support and funding overall ATS' ongoing programs, please reach out to us. Businesses are welcome to participate by placing your advertisements on our quarterly newsletter. Please reach out to us for more details or email at atsexecutive@alabamatamilsangam.org

## ATS SUB COMMITTEE

If you want to support us by joining a committee, we'll be excited to have you. ATS' success is determined by the overwhelming support by its members. We urge you to join a team either to commit short term or long term and be part of the fun. We'll fill you in with additional information. Please email atsexecutive@alabamatamilsangam.org

## ALABAMA TAMIL ACADEMY (ATA) SUPPORT

One of our flagship program that has a noble intention of educating children our beloved Tamil language. This is a program that is governed solely by ATS member volunteers who teach weekly throughout the school year. If you desire to support in anyway, including sponsorship, teaching or other help please reach out to us at atsexecutive@alabamatamilsangam.org

# Q1 FINANCIAL UPDATE

| No | Date | Description | Income | Expenses | |
|---|---|---|---|---|---|
| | | **Alabama Tamil Sangam Balance Sheet As Of Mar/31/2024** | | | |
| | | Balance Brought Forward From Q4 2023 | | | $17,243.40 |
| **No** | **Date** | **Description** | **Income** | **Expenses** | |
| 1 | Jan-21-2024 | Pongal Celebration | $2,130.22 | $4,308.55 | |
| 2 | Mar-31-2024 | General Expenses | | $161.99 | |
| 3 | Mar-31-2024 | 2024 membership | $882.48 | | |
| 5 | Mar-17-2024 | Women's day workshop | | $458.41 | |
| 6 | Mar-9-2024 | Nets & Spikes Tournament | $5,280.32 | $4,380.78 | |
| | | **Total income** | **$8,293.02** | | |
| | | **Total expenses** | | **$9,309.73** | |
| | | **Change in Net Assets** | | | **-$1,016.71** |
| | | **Ending Balance As of Mar/31/2024** | | | **$16,226.69** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | **Alabama Tamil Academy Balance Sheet As Of Mar/31/2024** | | | |
| | | Balance Brought Forward From Q4 2023 | | | **$4,842.34** |
| **No** | **Date** | **Description** | **Income** | **Expenses** | |
| 1 | Feb-28-2024 | Second Semester Fee | $800.00 | | |
| | | **Tamil School Income** | **$800.00** | | |
| | | **Tamil School expenses** | | **$0.00** | |
| | | **Change in Net Assets** | | | **$800.00** |
| | | **Ending Balance As of Mar/31/2024** | | | **$5,642.34** |

**For any questions related to Q1 balance sheet please contact us at atsexecutive@alabamatamilsangam.org**

**Join or Renew ATS membership** JOIN NOW

**Sponsoring for our upcoming ATS** SPONSOR

## ATS PUBLICATION TEAM

**Newsletter Name**

Hari Prasad

**Editors & Reviewers**

Babu Ramalingam
Hari Prasad
Jaya Anantharaman
Jeyani Presita Francis
Kavitha Karthikeyan
Madhavi Ravi
Mubeena Abdullah
Nithya Srinivasan
Ravi Thirunavukarasu
Roy Pravien
Sugantha Krishnan

**Interviewers**

Kavitha Karthikeyan
&
Mubeena Abdullah

Disclaimer: Alabama Tamil Sangam is a Non Profit, Non Political, Non Religious Organization. Interested in promoting Tamil Language, Culture, Art & Music and cultivating community relationships amongst its members.

## TRIVIA ANSWERS

பட்டம்

திங்கள்

முட்டை

பெயர்

## CONTACT & FEEDBACK

WE WANT YOUR FEEDBACK

# நன்றி

Thank you

ATS appreciates your interest and thanking you, for submitting your articles for this newsletter. We encourage you to send articles for the next Q2 newsletter to atscommunication@alabamatamilsangam.org

**Your feedback is more valuable to us to improve further!**

Submit your feedback CLICK HERE

## FOLLOW US